PR/2019/10/T

# ஜப்பான் தூதரகம்

இல .20, ஸ்ரீமத் ஆர்.ஜி .சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7,
இலங்கை
தொலைபேசி :94-11-269-3831~3 தொலைநகல் : 94-11-269-8629
மின்னஞ்சல் :cultujpn@sltnet.lk

**ஊடக அறிக்கை**

**பெப்ரவரி 27, 2019**

**ஜப்பானிய மொழியை கற்கும் புதிய முறைமை**
**ரஜரட்ட பல்கலைக்கழக சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதநேயப் பிரிவிற்கு மொழி ஆய்வுகூட உபகரணங்களை ஜப்பான் வழங்கிவைக்கின்றது**

இலங்கை, ரஜரட்ட பல்கலைக்கழக சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதநேயப் பிரிவிற்கு ஜப்பானிய அரசாங்கத்தினால் கலாசார அடித்தள திட்டத்திற்கான நிதிப்பங்களிப்பில் ஜப்பானிய மொழி ஆய்வுகூடத்தினை விஸ்தரிக்க 12 மில்லியன் ரூபாவினை வழங்க தீர்மானித்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம், ஜப்பானிய தூதுவர் அதிமேன்மைதகு திரு. ஆகிரா சுகியாமா மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர். டீ.யு. கருணாரட்ன ஆகியோரிற்கிடையே பெப்ரவரி 27, 2019 அன்று ஜப்பானிய தூதுவரின் இல்லத்தில் கைச்சாத்திடப்பட்டது. நகர திட்டமிடல், நீர் வடிகாலமைப்பு மற்றும் உயர்கல்வி அமைச்சர் மதிப்பிற்குரிய ரவுப் ஹக்கீம் உட்பட பல பிரமுகர்கள் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

ஜப்பான் அதிக வெளிநாட்டு ஊழியர்களை ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இருக்கின்றது. இந்த நிதியுதவி ஜப்பானிய மொழி கல்விக்கான பயிற்சி உபகரணங்களை வழங்கும். நவீன முறையான “அக்டிவ் லேர்னிங் (அறுகோண மேசையில் குழுச் செயற்பாடு)” (Active learning) மற்றும் ஜப்பானிய அறக்கட்டளையினால் வெளியிடப்பட்ட பாட நூலுடன் இணைந்து, மேலும் இத் திட்டம் ரஜரட்ட பல்கலைக்கழகத்தினை ஜப்பானிய மொழி கல்வியினை வழங்கும் மையப் புள்ளியாக மாற்றியமைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத் திட்டம், இலங்கை மற்றும் ஜப்பானிய நாடுகளிற்கிடையே கல்வி, கலாசார பரிமாற்றங்களை ஊக்குவிக்கும் எனவும் ஆழமான புரிதலினையும் ஏற்படுத்தும் எனவும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவராலயம் எதிர்பார்க்கின்றது.

***

மேலதிக தகவல்களிற்கு தூதுவராலயத்தின் கலாசார பிரிவினை தொடர்பு கொள்ளவும்
Tel: 011-269-3831~3 (ext.231)